# தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬ ஆகஸ்டுமீ ௭௨. [இல. ௪.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்திஸ்ஸர்வ மந்த்ரதம், தமேதா யதோ வாசோ நிவர்த்தந்தே, யத ஆத்மாநம் ஸாக்ஷாத்குர்வந்தி, ஸ ஏவ தமேவம் விதித்வாதிம்ருத்யுமேதி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## அட்டவணை.

### விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| ௧. | கடவுள்துதி | ௬௧ |
| ௨. | விளம்பரங்கள் | ௬௨ |
| ௩. | தெலுங்கு தத்துவபோதினி விளம்பரம | ௬௩ |
| ௪. | தத்துவபோதினி | ௬௪ |
| ௫. | பகவத்கீதை | ௬௯ |
| ௬. | உபநிஷத்து | ௭0 |
| ௭. | பேகன்வியாசம் | ௭௧ |
| ௮. | மநுநூல் | ௭௨ |
| ௯. | மாத்ருவாச்சல்லியம் | ௭௩ |
| ௧0. | பிரமதருமம் | ௭௫ |
| ௧௧. | அமிர்தவசனி | ௭௫ |
| ௧௨. | நிருபங்கள் | ௭௬ |
| ௧௩. | அமிர்தவசனியின்விளம்பரம் | ௭௯ |
| ௧௪. | சந்தாதாரர்அட்டவணை | ௮0 |


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

## கடவுள் துதி.

### இராகம் - பிலஹரி - யேகதாளம்.

பல்லவி.

மேல்-பிரமனைத்தொழுதெழு-அகமேசுகமேஜகமேநகைக்கிலும்-மேல்.

அநுபல்லவி.

பாலைப்பழிக்குமருள்-வேலையிலனுதினம்,
காலைச்சமயந்தனில்-சாலவுமுழுருவோம்..........(மேல்.)

சரணங்கள்.

௧. தாயினுமதிகவன்பாயெமை-ப்பரிக்கின்ற,
நாயகனுக்குரிய-தூயகருணைசேர்,
நேயத்தைதினம்பல-வாயிரந்தரமதாய்,
மாயைவிட்டன்பொடு-வாயில்வழுத்திக்கொண்டு...(மேல்.)

௨. வாரணஞ்சூழ்விரித்-தாரணியோர்பெற்ற,
ஆரணமுளபரி-பூரணஜோதியாம்,
நாரணனனைத்திற்கும்-காரணனெனவெண்ணி,
பாரணஞ்செயில்நம-மாரணமொழியுமே..........(மேல்.)

௩. சாவுமளவுங்கொடுங்-கோவம்விளைக்கும்பெரும்,
பாவவழியிலெம-தாவிநுழையாமலே,
காவலளிக்கவென-மேவும்பரமனுக்கு,
ஆவலுடன்பொருந்தச்-சேவகம்செய்குவோம்......(மேல்.)


## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்......................௧ - ௮ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். ௨ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...... ...... .........௧ - ௧௨ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச் சந்தாவீதம் - அ- அணா உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணா வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது

## புஸ்தகவிளம்பரம்.

| | |
|---|---|
| கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். | 0 - ௪ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௧ - 0 |
| தெலுங்கு பாலவியாகரணம்... | 0 - ௪ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௧ - 0 |
| வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்றுய் பயிண்டுசெய்தது,........... | 0 - ௮ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௨ - 0 |
| ஷை மட்டபயிண்டுள்ளது... .. | 0.- ௭ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௨ - 0 |
| வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது........ | 0 - ௮ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௨ - 0 |
| தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி | 0 - ௧ - 0 |
| தபால்கூலி........... | 0 - ௧ - 0 |
| ௧௮௬௫௵ மேமாசம் முதல் ௧௮௬௬௵ ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... | ௯ - 0 - 0 |
| தபால்கூலி.......... .. | 0 - ௪ - 0 |

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨0௳ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினுல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினுலே நிருபமெழுதமன முடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறேம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால்; எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியன்றவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறேம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னுலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறேம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்தசிந்தையுடன் தங்கள்கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறேம்.

## விளம்பரம்.

### தெலுங்கு தத்துவபோதினி.

தத்துவபோதினி என்னும் இப்பத்திரிகை, தமிழில் பிரசுரஞ் செய்வது போலவே தெலுங்கிலுமொன்று இயற்றக் கருதியிருக்கிறேம். இத்தெலுங்

குதத்துவபோதினியும் தமிழைப்போலவே சுமார் பதினாறுபக்கங்களை அடங்கியதாயிருக்கும். விஷயங்களும் சற்றேறக்குறைய தமிழ்ப்பத்திரிகைபோலவே யிருக்கும். கடவுள் அநுக்கிரகஞ் செய்வாராகில், வருகிற நவம்பர்மாதம்முதல் இதைப்பிரசுரஞ்செய்ய எண்ணியிருக்கின்றோம். ஷை நவம்பர்மாத முதல் முதல்தேதி தெலுங்குபத்திரிகையும் கரு-உ தமிழும் அச்சிடவேண்டியதாயிருக்குமாதலால்; வர்த்தகருக்கும்மற்றுமுள்ள ஜனங்களுக்கும் உபயோகப்படத்தக்க தேச வர்த்தமானங்களையும், அகவிலை முதலியபல ஸங்கதிகளையும்சேர்க்கயோசித்திருக் கிறோம். இத்தெலுங்கு தத்துவபோதினி, நவம்பர் முதல்ஏப்ரல்வரையில், ஆறுமாதத்துக்கு முதல்புத்தகம் முடித்து மேமாதந்தொடங்கி, இரண்டாவதுபுத்தகமாகச் செய்யக் கருதுகின்றோம். இவ்வாறு மாதத்துக்கு, முன் கொடுக்கப்பட வேண்டிய சந்தாவிவரம்.

| | |
|---|---|
| அரைவருஷசந்தா...... | 0 - சஉ - 0 |
| தபால்கூலி.. ...... | 0 - கூ - 0 |

சந்தாசெய்ய இஷ்டமுள்ளவர்கள் கூடிய சீக்கிரத்தில் அறிவிப்பார்களென கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## தத்துவபோதினி.

### சோதரர்களே!

சென்றசிலமாதங்களாய் இந்தராஜதானியைச் சேர்ந்த பலபிரதேசங்களில், மழையில்லாமல் க்ஷாமத்தினால் வருந்தி ஜனங்கள்மிகவும் துன்பப்படுகிறார்களென்பதைக்கேட்டிருப்பீர்கள். இப்பொழுதிருக்குங்கால தேசவர்த்தமானங்களைப்பற்றி யோசிக்கும் பலர் ஏதோவிபரீதம்விளையப்போகிறதென் றஞ்சி பல பயங்கரமான எண்ணங்களுக் கிடங் கொடுக்கின்றனர். ஆயினும், க்ஷாமமானது இக்காலத்துக் கென்று ஏற்பட்ட நவீனம் சம்பவமல்ல. சென்ற அறுபதுவருஷகாலமாய்ப் பலதடவைகளில் ஜனங்களிவ்வாறு க்ஷாமத்தினால்வருந்திச்சொல்லொணாதுயரத்தை அடைந்ததாகக் கேள்வியுற்றிருக்கின்றோம். பூர்வீகசரித்திரங்களைப்பார்க்கிலும் இவ்வாறேஒவ்வொரு காலத்தில் கொடியக்ஷாமத்தினாலடியுண்டு எண்ணிறந்தஏழைஜனங்கள்கோரமான பசிதாஹங்களைப் பொறுக்கமாட்டாமல் நரிநாய்களைத் தின்றும், ஒருவரையொருவர் பிடுங்கித் தின்றும் ஆராமல் அளவற்றதுன்பத்தைச்சகித்து, மடிந்தனரென்பதையும் அறிகின்றோம். இவ்வித பெருந்துன்பத்துக்குக் காரணம் யாதென்றும் இதனாலாகும் பயன்யாதென்றும் சற்றுவிசாரிப்பது இச்சமயத்தில் நமதுசடமையாயிருக்கின்றது. நாம் காண்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் காரணமும் பயனும் இல்லாமற் போகவில்லை. தலைநோய் போன்ற அல்ப பிணியின்பொருட்டு, ஹேதுவிசாரஞ் செய்து பரிகாரந்தேடிக்கொள்ளும் நாம் எண்ணிறந்த பிராணிகளுக்கு ஏககாலத்தில் சம்பவிக்கும் இப்பெரும் பிணியைப்பற்றிவிசாரியாமலிருப்பதுநன்றாகுமோ? மேலும் துன்பமும்இன்பம்பயக்குமென்கிற பழமொழிப்படிநமக்கு நேரிடும்துன்பத்தினாலுமொருபிரயோசனமடையலாம். அஃதெவ்வாறெனில்பசிவருத்தமானது நமது ஆகாரத்தை ருசிக்கச்செய்வதுபோல், நமையுறுந் துன்பமானது நமது இன்பங்களைச்சிறப்பிக்கின்றன. மேலும் கொடுங்கசப்பாகிய மருந்தையுண்டன்றோ உயிர்கொல்லவரும் பலபிணிகளை நீக்கவேண்டியதாயிருக்கின்றது. நமது துன்பத்துக்குக்காரணம் இன்னதென்றறிவோமாகில் மீண்டும் அக்காரணத்தினால் அக்காரியம் ஜனிக்காதவண்ணம் கூடுமான வரையில் முயற்சியும் செய்யலாம்.

நாமறிந்தவரையில் நமையுற்றபலதுன்பங்களுக்குநமது துஷ்கிருத்தியங்களேகாரணமாயிருக்கின்றன. நம்மாலாவது, பிறராலாவது, நமக்குவிளைகின்றதுன்பங்கள் யாவும் காயத்தைப்பற்றினவையாகவும், மனதைப்பற்றினவையாகவும், இரண்டு வகைப்படும். காயத்தைப்பற்றியவை மெய்,

வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் அவற்றிற்கு விஷயமாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலன்களிடத்து அதிக்கிரமித்துச் செல்லுகையால் ஜனிக்கும். மனதைப் பற்றியவை காமக்குரோதமதமாச்சரியாதி துர்க்குணங்களாலுண்டாகும். சரீரமும்மனதும், ஒருமைப்பட்டு பரஸ்பரசம்பந்தமுடையவையாகையால், ஒன்றைப்பற்றிய துயரம் மற்றொன்றைப்பற்றுவதுமுண்டு. சரீரபிணியால்வருந்தி மனமுமெலிந்து துன்பமும், க்ஷயமும் அடைவதுபோலவே, துக்கத்தால் பீடிக்கப்படும் மனது சரீரத்தின் சுகத்தைக்கெடுத்து க்ஷீணிக்கச்செய்வதையும்காண்கிறோம். நமது பிரோபணையும் குற்றமுமின்றியே பிறரால் சில கெடுதி நேரிடுவதுமுண்டு. இவைபெரும்பாலும் பிறருடைய துர்க்குணங்களாலாவது, நம்முடைய அதிருப்தியினாலாவது, ஜனிக்கும். இவைநிற்கமனித சங்கல்பமின்றியே தெய்வீகமாய்ச்சம்பவிக்கும் சில பெருந்துன்பங்களுமுண்டு. வாந்திபேதிமுதலிய பெருவியாதிகள், பெயல்காற்று, பெருமழை, பூகம்பம், பூவரட்டல், க்ஷாமம்முதலியவை இவ்வகுப்பைச்சேர்ந்தன. இவைகட்குக் காரணஞ்சொல்லளம்மால் முடியாது. வாந்திபேதிமுதலியபிணிகள் ஒருவாறு மனிதருடைய விபரீத நடையாலும் அபரிசுத்தத்தினாலும் உண்டாகிறதென சொல்லக் கூடுமாயினும், அவைகள் ஒவ்வொரு இடத்தில்மாத்திரமே ஒவ்வொருகாலத்தில்மட்டுமே விஸ்தாரமாகப் பரவி அளவிறந்ததுன்பத்தை விளைவிப்பதற்கு காரணம்கண்டறிவதசாத்தியமாகும். இதற்கும்இதைப்போன்றமற்றபெருந்துன்பங்களுக்குங் காரணம் சாண்ப தருமையாயிருத்தலால் இவற்றைத் தெய்வீகமென்றேநினைக்கவேண்டியதாயிருக்கின்றது. மேலும்இத்தெய்வீகமானது க்ஷாமம்என்னப்பட்ட அகோரமானகொடுமையில் விளங்குவதுபோல் மற்றெதிலும்விளங்குவதில்லை. வாந்திபேதிமுதலிய வியாதிகளுக்கு மனிதருடைய அபரிசுத்தத்தைக்கொண்டும், பெயல்காற்று, பூகம்பம்முதலியவற்றிற்கு, பூமியின்கண் அமைந்திருக்கும் பூதங்களின்ஸ்வபாவதருமங்களைக்கொண்டும், ஒருவாறுகாரணஞ்செப்பக்கூடுமாயினும், பெருமழையையும், பூவரட்டலையும், ஸ்வபாவதருமங்களைக் கொண்டாவது, வேறெந்தகாரணத்தைக்கொண்டாவது, விளங்கச்செய்யமுடியாதென்று நினைக்கிறோம். நாமறிந்தவரையில் மழைக்குக் காரணமாயிருப்பது சூரியரஸ்மியும் காற்றுமேயன்றி வேறில்லை. பூமியின்கண்கடல் முதலிய பலவிடங்களிலுள்ள ஜலமானது சூரியரஸ்மியினால் சுடப்பட்டு ஆவியென்னும்சூக்ஷ்மாகாரமடைந்துவிண்ணேறி, பெருங்கூட்டமாய்ச் சேர்ந்துகரியமேகங்களாய்க் குளிர்ந்தகாற்றுவீசவே, ஆவியாகியமேகமானது ஜலபிந்துக்களாய் வருஷிக்கின்றன. காற்றானது சிலவேளைகளில் ஓரிடத்திலுள்ள மேகங்களைமற்றோரிடத்துக்கு ஓட்டிவிடவும், கூடியிருக்கும் மேகங்களைக் கலைத்து சின்னபின்னப்படுத்தவும் கூடுமாயினும், பெரும்பாலும் மழையின் வளப்பத்தைக் குறைக்கமாட்டாது. மேலும்காற்றுவிசேஷமாகவீசுவதற்கும் முக்கியகாரணஞ்சூரியகிரணமேயன்றிவேறல்ல. சூரியகிரணங்களால்சுடப்பட்ட காற்றானது இதற்குஸ்வபாவிகமாயுள்ளதைப்பார்க்கிலும்அதிசூக்ஷ்மமான ஆகாரத்தைப்பூண்டு, விரிந்து மேல்நோக்கிச்செல்லுகின்றது. அச்சமையத்தில் அண்டையிலுள்ளஆகாயமானது அவ்வளவு சூரியனால்சுடப்படாமையால், விரிந்து மெலிந்துபோன ஆகாயத்தினுடைய ஸ்தானத்தை ஆக்கிரமிக்கவிரைவாகவும் வேகத்தோடும்வருகின்றது. இதனால்பலவிதகாற்றுகள் உண்டாகின்றன. ஆகையால் மழைக்குமுக்கியமாய்ச்சூரியனே காரணமாயிருக்கின்றான். ஆகையால் மழையும், மற்றபருவகாலங்களும், சூரியனுக்கும்பூமிக்குமுள்ள பரஸ்பர சம்பந்தத்தைச்சார்ந்ததாயும், இச்சம்பந்தத்தாலன்றி வேறெதனாலும் பேதப்படாதனவாயுமிருக்கின்றது. பூமிக்கும் சூரியனுக்குமுள்ள இச்சம்பந்தம், அனேகவாயிரநூற்றாண்டுக்கொருதடவை சற்றுபேதப்பட்டபோதிலும், பிரதிவருஷமும்காணக்கூடியமாற்றமடைவதில்லையென்பதைக்கோ

ளசாஸ்திரத்தினாலறிகின்றோம். ஆகையால் கடவுளுடைய திருவுள்ளத்தையன்றி, இதற்கு வேறுகாரண முரைக்கக்கூடவில்லை. ஸ்வபாவத்தால்யாவும் உண்டாகிநின்று குலைந்து மீண்டுமீண்டும் ஜனிக்குமென்றுகருதி மரணகரமான உலகவாழ்க்கையே உசிதமென்று கொண்டாடும் நாஸ்திகர்களே! இதற்கென்ன விடையுரைப்பீர்கள்! சிலகாலங்களில் விஸ்தாரமாய்மழைபெய்வதும் சிலகாலத்தில் ஒன்று மில்லாமல்வரண்டு போவதும் ஸ்வபாவமென்று சொல்லத்துணிவீர்களோ ? மழையைப்பெய்யச்செய்வதும் பெய்யாமல் தடுப்பதும் சர்வ வல்லமையுள்ள கடவுளுடைய கருணாகரமென்பதைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டும் ஏன்கண்மூடிக் கொள்வீர்கள் ! அவனுடைய பயத்தினால் வாயு வீசுகின்றது, சூரியன்உதிக்கின்றான், அக்னிஜ்வலிக்கின்றது, இந்திரன் வருஷிக்கின்றான், மிருத்தியுவதிக்கின்றான், என பொருள்படவேதம்.

భీషాస్మాద్వాతః పవతే, భీషోదేతి సూర్యః,
భీషాస్మాదగ్ని శ్చేంద్రశ్చ మృత్యుర్ధావతి
పంచమః.

என முறையிடுகின்றது.

ஆயினும், அநந்தகாருண்ணியராகியகடவுள்வீணேஜனங்களை இவ்விதத்துன்பத்தினால்வருத்துகின்றாரோ?இதனால்மனிதருக்குயாதேனும் பயனுண்டோவென்பதைப் பற்றி சற்றுவிசாரிப்போம். இவ்விசாரணைச்செய்யப்புகுமுன் நமது பாத்திராபாத்திரத்தைப்பற்றி யொருவார்த்தைச் சொல்லுவதாவசியகரமென்று நினைக்கிறோம். ஒவ்வொருமனிதனும் தான்செய்த கொடுமைகளையும் அகோரபாபங்களையும்,தன் தகைமையும், சீர்தூக்கிப்பார்த்து, தான் தெய்வீகமாயனுபவிக்கும் துன்பங்களோடொப்பிட்டுப் பார்ப்பானாகில், தான்சஹிக்கும் ஒவ்வொருதுன்பமும் தனக்குத்தக்க பிரதிகாரமேயன்றி வேறல்லவென்பதைஎளிதில்அறியலாம்.மேலும் தனதுபாவத்துக்குத்தக்க பிரதிகாரம் கடவுள் செய்யநினைத்தாராகில் சகிக்க முடியாதென்றும், தன் துன்பத்தின் கொடுமையானது தன்பாபத்தின் கோரத்தி லாயிரத்திலொருபங்குக்கும் ஒப்பல்லவென்று மறியலாம். நாமனுபவிக்கும்சுகமும் இன்பமும் எப்பொழுதும் நமதுதகைமைக்குமேற்பட்டே இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் நமது ஸ்திதியின்பொருட்டு நாம் அதிருப்தியடைய யாதொரு காரணமுமில்லை. இதுநிற்க இனி இதனால் ஆத்மகோடிகளுக்குப் பயனுண்டோ? இஃது கடவுளுடைய கொடுங் கோபச் செயலோ அல்லதுகாருண்ணியந்தானோ சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கொட்டினால்தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சு, என்பதுபோல் பயத்தாலன்றி நயத்தால் மாத்திரமே கடவுளுடையஸ்வரூபத்தையறிந்துகொள்வதுதுர்லபமாயிருக்கின்றது.கொடுத்தோனையும்கொடையின்கருத்தையும்முற்றும்மறந்துகொடையைமாத்திரம் வினைபோகப்படுத்துவது மனிதருக்குப்பெரும்பாலும் ஸ்வபாவமாயிருக்கின்றது.ஒருவனுக்குப்பிரதிதினமும் குறைவில்லாமல் அன்னசத்திரத்தில் சாப்பாடு கிடைத்துக்கொண் டிருக்குமானால், அவன் வேறுகவலையற்றவனாய், மதங்கொண்டு தன்னைக்காப்பாற்றும்தாதாவைமறந்து சற்றுங்கவனியாமல் தனக்கிஷ்டமானவழியில் நடக்கலாம். மற்றொருநாள் வழக்கப்படி தன்னாஹாரம் தனக்குக் கிடைக்காமற்போமாயின், தனக்கித்தனைநாள் கொடுத்துவந்தவனார், இன்று கொடாமற் போவதற்குக்காரணமென்னவென தன்இரக்ஷகனைப்பற்றிவிசாரிக்கும்படி நேரிடுமல்லவா ? மழைகள் விஸ்தாரமாய்ப் பெய்து பயிர்கள் செழித்தனவென்று கடவுளை நன்றியறிதலோடு வாழ்த்துவோர் சிலராயினும், மழை பெய்யவில்லையென கடவுளை மன்றாடுவோரும் நொந்துகொள்வோரும் எண்ணிறந்தவருளர்.

ஆகையால் இப் பெருந்துன்பமானது அளவற்றஆன்மகோடிகள் தமதுஇரக்ஷகனாகிய கடவுளைச்செல்வச்செருக்கால் முற்றும் மறந்துபோகாமலிருக்கச்செயும்

ற்பயனையளிக்கின்றது. மேலும் இஃது நமதுஆன்மாவை பரிசுத்திசெய்யும் வேதிமாத்திரையொக்கும். நாளாவட்டத்தில்நமது சரீரத்தைப்பற்றுகிறஅழுக்கைக் சசப்பாகியமருந்தையுண்டு நீக்குவதுபோல் நமதான்மாவைப்பற்றுந் துர்க்குணங்கள் மேலிட்டு நசிக்கச்செய்யாம லிருக்கும்படி அருள்நிறைந்த கடவுளானவர் வறுமையென்னும் மருந்தைக் கொடுத்து நம்மைச்சுத்தி செய்கின்றனர். தலைநோயுங் காச்சலுந் தனக்குவந்தால்தெரியுமென்பதுபோல், வருத்தம் அனுபவித்தவர்களுக்கன்றி அவ்வருத்தத்தின் ஸ்வரூபந்தெரியமாட்டாது. நாம் துன்பத்தை அனுபவித்தாலன்றி பிறருடைய துன்பத்தின் பொருட்டு தாபப்படுவதருமை. துன்பத்தின் ஸ்வரூபத்தை அனுபவத்தா லறியாதவர்கள் பலகொடுமைகளைச் செய்ய சற்றும் அஞ்சார்கள். ஆகையால் துன்பமானது தயாளத்தோடும் இரக்கத்தோடும் இளகச்செய்து நம்மை சன்மார்கத்தில் செலுத்துகின்றது. மேலும்இவ்வறுமையானது இவ்வுலகவாழ்க்கை பொய்யென்பதையும் அநித்தியமென்பதையும் உணர்த்திநமதுபெருமையைக் கொன்று, நமது தாழ்மையை வற்புறுத்துக்கூறுகின்றது. சரீரப்பிணியினால்மனம்குவிந்துதாழ்வையும் தீனத்துவத்தையும் அடைவதுபோல் மற்றெதனாலும் ஆவதில்லை. சரீரத்தைப் பற்றும் பலநோய்களுள்ளும், க்ஷாமகாலங்களில், சம்பவிக்கும் பசிநோயைப்போன்ற, கொடுமை வேறொன்றுமில்லை. இஃது செல்வர்களையும் வறியோரையும் சமமாகவருந்தச்செயும் வன்மையுடையது. இக்காயம் சோற்றாலாகியதேயன்றி; பொன்னினாலாவது, பணத்தினாலாவது, ஆவதில்லை யென்பது இதனால் யாவருக்கும் பரிஷ்காரமாய் விளங்குகின்றமையால், இச்சரீரத்திலும் இவ்வாழ்கையிலும் சற்றும்நம்பிக்கைவைக்காமல், ஆன்மகோடிகள் பரலோகநித்திய சுகத்தையளிக்ககூடிய ஜகதீசனையே சரணமடைந்து வழிபடவேண்டுமென்பதையும் உணர்த்துகின்றது. இத்துன்பத்தினால் மற்றுமொருசிறுபிரயோசனமுண்டு. அஃதாவது க்ஷாமகாலத்தினால் மனிதர் க்ஷேமகாலத்தின் சிறப்பைஅறிந்து கொள்ளுகின்றனர். தேஹஆரோக்கியத்தாலுண்டாகும் சுகத்தை எவ்வளவும் பாராட்டாதமனிதர், வியாதிசம்பவிக்கில், அவ்வாரோக்கியத்தின் மேன்மையுணர்ந்து, அஃதை இழந்துபோனதர்க்காக வருந்துவார்கள். அதுபோலவே துன்பத்தைக் கொண்டு கடவுள் நாமனுபவிக்கும் இன்பத்தின் மேன்மையைஅறியச்செய்கின்றனர். கடைசியாக க்ஷாமத்தினால் விளையும் பயன்கள் பலவற்றிலும் மேலானதும் முக்கியமானது மொன்றுண்டு. நமதருமைப்பிதாவும் சிருஷ்டிகர்த்தருமாகிய கடவுளுடைய அருளாலன்றி நமக்குவாழ்க்கையும்நிலைமையும்இல்லையென்பதும் நாமவருடைய அருளுக்குமுற்றும் ஆதினப்பட்டவர்களென்றும், அவ்வருளையே என்றும் நாடுவது நமது கடமையென்பதையும் நேரே ஒவ்வொரிதையத்திலும், உளியால்செதிக்கியதுபோல், படியச்செல்கின்றதென்பதேயாம். இதற்கு க்ஷாமத்தால்வருந்தி வானத்தை நோக்கி ஆண்டவனேயென்றலரும் ஒவ்வொருபிராணியும் சாக்ஷியாகும். ஆகையால் இந்த க்ஷாமகாலத்துக்கு பயப்படாமல் இதுவும் நமதப்பனுடைய அருட்கொடை யென்றே நம்பி, நமதுசோதரர்களுக்கு நம்மால் கூடியசஹாயஞ் செய்து அடியில் கண்டவாறு கடவுளைத்தொழுதேற்றுவதே நமது கடமையென்றுகருதுகின்றோம்.

## க்ஷாமகாலவந்தனம்.

ஓம்பிரமணேநம?

அபாத்திரர்களும்பாவிகளுமாகிய எம்மை எமதுபாவப்பிணியின்பொருட்டு உபேக்ஷியாமல்இரக்ஷித்தருளுகின்ற கர்த்தனே! நின்தயாளஇருதயசித்விலாசத்தையறியஎமதுபுல்லறிவாலாகுமோ? நினதபரிமிதகருணையாலன்றோ எம்மையும் பொருட்டாகக்கருதிபடைத்து, எமதுசந்தோஷத்தின்பொருட்டு இஹபரசுகங்களையுமளிக்கின்றனை. நினதபரமிதகருணைவாச்சல்லியத்தை சற்றுங்கருதாமல் தீமையே நாடுகின்ற அடியாளை தாமஸகித்தினாயினி

ன்றெழுந்திருக்கச்செய்வதுபோல் க்ஷா
மத்தால் எம்மைத்தாக்கி அழைக்கும் நி
ன்கருணையென்னே! எமதுபாவப்புண்களை
யாற்றவரும் பரிகாரியே! நின்கருணாகரத்
தில்காணும் க்ஷாமசக்தியைக் கண்ணுற
யாங்கள்நடுங்குகின்றோம். துன்பத் துக்க
ஞ் சினவராக் ஓமென்றலர்கின்றோம். அ
ப்பனே எமதுபுண்களையறுத்து சொஸ்த
ப்படுத்துவதற்குமுன், கிருப்கி, பொறு
மை விசுவாசம், என்னப்படும் வஸ்து
க்களைக் கொண்டு எமது பொறிகளைய
டக்கி, யாதொருதுன்பத்தையும் யாங்க
ளுணராமலே எம்மை ரக்ஷிப்பாய். இம்
மாயவாழ்க்கையின் மாமோகங்களால்செ
ருக்குற்றஎம் மனம்குவிந்துருகிநின்னரு
ளையே நாடச்செய்வாய். இறைவனே! இத்
துன்பத்தைச்சகியாமல்நினைவிட்டுஓடிநீச
ராய்நசித்துப் போகவிடாமல், எம்மைக்க
ட்டியணைத்துக்காப்பாற்றுவாய். அப்பனே
நின்கருணைமேகங்கள்என்றுவருஷித்துஉ
லகம் என்றுசெழிக்குமோவென்றேக்கமு
ள்ளஎம்மைக் கைவிடமாட்டாயெனபூர்த்
தியாய்நம்பிநினைசரணடைவோமாக. எங்க
ளுக்கின்னதுநன்மையென்றறியாதயாங்க
ள்நினையெவ்வாறு துணிந்து மன்றாடுவோ
ம். என்றும்எமக்கு நன்மையே புரிகின்ற
னை. இந்தக்ஷாமத்திலும் எம்மை சுகிக்கச்
செய்கின்றனையென அநந்தவந்தனஞ்செ
ய்புமடியாரைகாத்தருளுவாய். ஓம்தத்ஸத்.

ஆசிரியவிருத்தம்.

தகையற்றவெம்மையுந் தவராதுசாக்கின்ற
தண்ணருள்படைத்ததேவா,
தரைமீதுவிண்பொய்த்துதாபமடைவதுமுந்
தன் - தயைசெய்தசெயலல்லவோ,
மிகைபடுமபாவச்செருக்கினுலோங்குமெம்
மிதமிலாபாசங்களை,
மிடியெனும்வாளினல் வேருடனருக்கவரு
மிறைவனேஜகதீசனே,
பகைபழிப்பாவங்க ளானபலபிணிகளும்
பாரிலூன்றுதவண்ணம்,
பரவிடும்க்ஷாமதசை பாலிக்கவந்ததென
பாவியேமறியவசமோ,
புகைஎனச்சூழுமெம் புல்லறிவகற்றியே
புனிதராக்கிடுகடவுளே,
பூரணதயாநிதி புருஷஉத்தமதேவ
பூரணானந்தமயமே.

திருவல்லிகேணிவாசியொருவர் நா
ம்ஸ்வமதாபிமானிகளா யிருப்பதைக்க
ண்டு ஆச்சரியப்பட்டு நம்மை சிலகே
ள்விகேட்கிறார். இவருடைய நிருப ச
ங்கிரகம் இப்பத்திரிகையின்னோர் பாகத்
தில் காணலாம். யாங்கள்முற்றுங் குற்ற
மற்றவர்க ளென்று யாங்களொருக்கா
லும் நினைக்கவில்லை. எமதுசக்திக்கிய
ன்றவாறு நமதுதொன்னூல்களைப் பரி
சோதித்து பாரமார்த்திகத்தை பலஜன
ங்களின்பொருட்டு பிரசுரஞ்செய்து ந
மது அபேதமானஆதிமதத்தை ஸ்தாபி
க்கவேண்டுமென்பதே யெங்கள் கருத்
தென் றெல்லோரும்அறிவார்கள். இக்க
ருத்துக்கேற்கவே சமய பேதங்களுக்
கெவ்வளவும்இடங்கொடாமல் காக்கமு
யல்கின்றோம். இவ்வாறுஇருக்கவாசுதே
வன் விஷ்ணுமுதலிய நாமங்களை ஏன்
நாங்கள் பிரயோகிக்கக் கூடாதென்று
கேட்கப்படுகிறது. இதற்குச்சமாதான
ம் மேற்கூறிய எங்க ளுத்தேசியமே
போதுமானதாகும். கேவலம் ஒருசம
யத்துக் கடுத்த நாமங்கள் மற்றொருச
மயத்தாருக்கு இஷ்டமாயிராது. அவ்
வாறு சமயநாமங்களை பிரயோகித்தா
ல் பலருக்கு எமது அபேதநிலைமை
யைப்பற்றி சந்தேகமுண்டாகலாம். ஆ
கையால் யாங்கள்எல்லோருக்கும்பொ
துவானவும் நிஸ்ஸந்தேகமானவும், வெ
ளிப்படையாக எமது அபிமதத்தைவி
ளக்காநின்றவும் பிரமசப்தத்தைப் பெ
ரும்பாலும் உபயோகப் படுத்துகி
றோம். இஃது அபேதபாரமார்த்திகத்
தை யுணர்த்துவதால் பலதொன்னூல்
களும் சிறப்பித்துப் புகழ்ந்தன. ஆயி
னும் யாங்கள்நாமத்திலேயே, ஒருசிற
ப்புண்டென நினைப்பதுமில்லை, போ
திப்பதுமில்லை. விஷ்ணு ருத்திராதிநா
மங்கள் பலசமயக் கொள்கைகளையும்
பேதங்களையும் காட்டுகின்றமையால்அ

வைகளைத்தனியே, பிரயோகிப்பது சந்தேகத்துக்கிடமுண்டாக்கும். சாதாரணமாய், விஷ்ணுவென்றால் நீலமேகவர்ணனாய் சதுர்புஜங்களோடு சங்குசக்கிரகதாபாணியாக வைகுண்டபுரத்தில் ஆதிசேஷன்மேல் படுத்திருப்பதாக சமயாசாரிகள்சொல்லும் ஒருதேவனைக் காட்டுகின்றது. இவ்வாறே சாதாரண ஜனங்களும் அறிகின்றனர். இதைப் போலவே மற்றவைகளுக்கும் காணலாம். ஆயினும் இந்நாமங்களெல்லாம் பரமாத்மாவுக்கே வேதம்சொல்லுகின்றதென்பதுண்மையே. யாங்களு மந்நாமங்களைத் தியஜிக்கவில்லை என்பது யாங்கள் பிரதிவாரமும் அத்தியயனஞ்செய்துவரும் சுருதிவாக்கியங்களால்விளங்கும். யாங்களிந்தநாமங்களை முற்றும்பிரயோகப்படுத்துவதில்லைஎன்ப துண்மையல்ல.ஆயினும்யாங்கள்பிரணவத்தையும், பிரமசப்தத்தையும் முக்கியமாகக்கொண்டிருக்கின்றதுண்மை.இதற்குக் காரணம் முன்பே யுரைத்தனம். மேலும் யாங்கள் அபேதமான ஒருத்துவ வேதாந்தமார்க்கத்தைப் போதிக்கினும், எங்கள்கொள்கைக்குச் சின்னமான அறிகுறிகள்வேண்டாமோ. இக்குறிகளன்றி பிறரெம்மை எவ்வாறுஅறிந்துகொள்ளக்கூடும். அப்படிப்பட்ட சாங்கேதிகமின்றி உலகத்தில் ஒருகருத்தும்பரவமாட்டாதல்லவா! இதுவன்றி எங்களுடையமதமென்பது நூதனமாயொன்றில்லை. இம்மதம் எத்தேசத்தாருக்கும் எக்காலத்தோருக்கும் பொதுவாய், என்றுமுள்ளதேயன்றி வேறல்ல. அஃதாவது,எல்லாவற்றையும்படைத்த கடவுளை நாமெல்லோரும்அபேதசோதர வஞ்சையோடு வழிபட்டு, அசத்தியந்தவிர்த்துசத்தியமே பாராட்டினால் நமக்கு இகத்திலும் பரத்திலும் சுகமுண்டென்பதே. இதைவிட்டால் மோக்ஷத்துக்கு வேறுவழியில்லை இவ்வளவு மெங்கள்மதமேயன்றிவேறல்ல. இஃது எல்லாசமயங்களுக்கும் பொதுவென்றே கருதுகிறோம். ஏனெனில் இஃதை கடவுள் ஒவ்வொரு இருதயத்திலும் கல்லை உளிக்கொண்டுசெதுக்கியதுபோல் படியச்செய்திருக்கிறார். இதற்குஅவரவருடைய மனமேசாக்ஷியாகும். இவ்வாறல்லவென்று யாரேனுஞ்சொல்லத்துணிந்தால் பொய்த்தூக்கந்தூங்குவோரை யெழுப்ப ஒருவராலு முடியாதென்று விடையுரைக்க நேரிடும். இவ்வாறு ஸ்வபாவஜனிதமாயும், அனுபவசித்தமாயும், லோகபரசித்தமாயும் இருக்கும் இம்மதம் நமது வேதங்களும்கற்பிக்கின்றமையால் அவ்வேதங்களை யாங்கள் ஶ்ரேஷ்டமாகக் கொள்ளுகின்றோம். யாங்கள் ஶ்ரேஷ்டமாகவும் பிறருக்குபோதிக்க ஆதாரமாகவுங்கொண்டிருக்கும் வேதங்கள் பிரணவத்தாலும் பிரமசப்தத்தாலும் அப்பரம்பொருளை விசேஷமாயுணர்த்துகின்றது. இதற்குக்காரணமில்லாமல்போகவில்லை. நாமமில்லாத கடவுளையும் மொரு நாமமில்லாமல் நிஸ்ஸந்தேகமாய் எச்சந்தர்ப்பத்திலும் உணர்த்துவதசாத்தியம். ஆகவே யாங்கள் வேதங்கள்கொண்டாடும் பிரணவத்தையும் பிரமசப்தத்தையும் பிரதிஸ்தோத்திரத்தின் ஆதியிலும் அந்தத்திலும் பிரயோகிக்கிறோம். மற்றநாமங்களை இதரசமயங்களில் பிரயோகிக்க யாதொரு ஆக்ஷேபமுமில்லை, அவ்வாறு செய்யவுஞ்செய்கிறோம்.

---

## பகவத்கீதை.

(தொடர்ச்சி.)

௪௬. எவனால்பிராணிகளுடைய உத்பத்தி (ஆகின்றதோ) எவனால் இந்தசமஸ்தமானதும்வியாபிக்கப் பட்டதோ, அந்தஈசுவரனை மனிதன்ஸ்வகர்மத்தினால்பூஜித்துச் சித்

தி பெறுகின்றான்.

௪௭. விகுணமானஸ்வதர்மம் செம்மையாகஅநுசரிக்கப்படும் பரதர்மத்தைப்பார்க்கிலும் ச்ரேஷ்டமானது. ஸ்வபாவத்தால்நியமிக்கப்படும்கர்மத்தைச்செய்பவன் பாபத்தையடையான்.

௪௮. ஓய் குந்திபுத்திரா! தோஷத்தோடுசேர்ந்ததாயினும், ஸ்வபாவஜனிதமான கர்மம் விடக்கூடாது. ஏனென்றால், தூமத்தால்அக்கினிசூழப்படுவதுபோல,எல்லாக்கர்மங்களும் தோஷத்தால்சூழப்படுகின்றன.

௪௯. சர்வத்திலும் விருப்பமற்றபுத்தியும், ஜயிக்கப்பட்ட மனதையும், விடப்பட்ட ஆசைகளையும் உடையவன், சன்னியாசத்தினால் (கர்மபலத்தியாகத்தினால்) உத்கிருஷ்டமான, நிஷ்கர்மசித்தியைஅடைகின்றான்.

௫0, ஓய் குந்திபுத்திரா! சித்தியைப்பெற்றவன் பரமாத்மாவை எவ்வாறுஅடைகின்றானோ, அந்தஉத்கிருஷ்டமான ஞானநிஷ்டை எதுவுண்டோ அதைஎன்னாலறிந்துகொள்.

௫௧. மாயாரஹிதமான புத்தியோடுங்கூடினவனாய் தைரியத்தால் மனதைவசப்படுத்திக்கொண்டு, சப்தாதிவிஷயங்களையும் இராகத்வேஷங்களையும்விட்டு,

௫௨. இரஹசிய ஸ்தலத்திலிருப்பவனாய், இலகுபோஜனசுசீலனாய்,ஆளப்பட்ட மனோவாக்குக்காயங்களுடையவனாய், எப்பொழுதும் தியானயோகாசக்தனாய், (அதில்) வைராக்கியங்கொண்டு,

௫௩. அஹங்காரம், வலிமை, பெருமை, காமம், குரோதம், லோபம், இவைகளைவிட்டும்மகாரஹிதனாய்,சாந்தனாகியநிஷ்டையுடையவன்பரமாத்மாவின் பதவிக்குத்தக்கவனாகின்றான்.

௫௪. பிரம்மநிஷ்டனானவன், நிர்மலமனதுடைய வனாய், நஷ்டத்தைப்பற்றி துக்கப்படுவதுமில்லை, (லாபத்தை) விரும்புவதுமில்லை. சமஸ்தபிராணிகளிடத்தும் சமத்வமுடையவனாய் பரமான என்னிடத்தில் பக்தி அடைகிறான்.

௫௫. நான் எவ்வளவினனோ, எப்படிப்பட்டவன் ஆகின்றேனோ, என்னைபக்தியால், உண்மையாகஅறிகின்றான். பின்புஎன்னை உண்மையாக அறிந்துகடையில்என்னையே அடைகின்றான்.

௫௬. என்னையே ஆச்ரயமாகஉடையவன், எப்பொழுதும் சமஸ்தகர்மங்களைச் செய்யப்பட்டவனாகி, என்அநுக்கிரகத்தால்,நாசரிஹிதமும் சாச்வதமுமான பதவியைஅடைகின்றான்.

௫௭. (ஆகையால்) நீ விவேகத்தினால் சமஸ்தகர்மங்களையும், என்னிடமிருத்தி, நானே உத்கிருஷ்டமென்றடைந்து, புத்தியோகத்தினால் ஆச்ரயித்து எப்பொழுதும் என்மீது மனதுடையவனாவாய்.

௫௮. என்னிடத்தேமன துடைய நீஎன்னனுக்கிரகத்தால் சகலதுக்கங்களையும் அதிக்கிரமிக்கமாட்டுவாய், நீ அஹங்காரத்தினால் கேளாமற்போவாயானால் கெட்டுப்போவாய்.

௫௯. ஓய் குந்திபுத்திரா! ஸ்வபாவத்தினால் ஜனித்தஸ்வகீயகர்மத்தினால் கட்டுண்டவனாய் எந்தகர்மத்தைச் செய்யவிரும்பமாட்டாயோ, அதையேமோஹத்தினாலேவசப்பட்டுச் செய்யமாட்டுவாய்.

௬0. அஹங்காரத்தை ஆச்ரயித்து யுத்தஞ்செய்யமாட்டேன்என்று எண்ணுவாயானால், இந்த நினது நிச்சயம்பொய்யாய்விடும். ஏனென்றால் பிரகிருதிஸ்வபாவம் உன்னைஆளக் கூடும்.

## தைத்தரீயஉபநிஷத்து.

### ஐந்தாவது - அநுவாசம்.

(சென்றமாதத்தின்சஞ்சிகையில் இவ்வநுவாசம் அச்சிட்டிருந்தும் பிழை மிகத்திருத்தாமையிருப்பதுகண்டு இச்சஞ்சிகையிலும் அச்சிடலாயிற்று,)

௧ 'பூ:' 'புவ:' 'ஸுவ:' என்னு மிம்மூன்றும் வியாஹ்ருதிகள் (என்றால் மறைப்பொருளான=இரஹஸியமான நாமங்கள்,) ஆகவிருக்கின்றன. மஹாசமஸ்புத்திரராகிய மாஹாசமஸ்ஸியர் 'மஹ:' என்பதை நான்காவதாக, (வியாஹ்ருதியாக) ப் பிரவசனஞ்செய்தார் (வெளியிட்டார்) அது ஆத்மா (ஜீவன்),—மற்ற † தேவர்களெல்லாம் (அதின் அங்கங்கள்,—'பூ:'என்பது இவ்வுலகம்,—

† இவ்விடத்தில் "தெவதா:=தேவர்கள்" என பன்மையாக உரைத்திருப்பது அப்பிரம்மத்தின் உருப்புக்கள் பலவாதலால் ஒவ்

'ஹுவ:'என்பது ஆகாயம்,—'ஸுவ:'என்பது அந்தலோகம் (என்றால்மேலுலகம்.)—

உ. 'மஹ:'என்பது ஆதித்தியன்,—அவ்வாதித்தியனாலேயல்லவா எல்லாஉலகங்களும் விருத்திசெய்யப் படுகின்றன.—'ஹூ:'என்பதுஅக்னி,—'ஹுவ:'என்பதுவாயு,—'ஸுவ:'என்பதுஆதித்தியன்,—'மஹ:'என்பதுசந்திரன்,—அச்சந்திரனாலேயல்லவா ஜோதிஸ்களெல்லாம்விருத்திசெய்யப் படுகின்றன.—'ஹூ:'என்பது இருக்கு(வேதம்),—'ஹுவ:' என்பது ஸாமம்,—'ஸுவ:'யஜுஸ்,—

ரு. 'மஹ:'என்பதுபிரம்மம்,—அப்பிரம்மத்தினாலேயல்லவா ஸகலமாகிய வேதங்களெல்லாம் விருத்திசெய்யப்படுகின்றன.—'ஹூ:'என்பது பிராணன்,—'ஹுவ:'என்பது அபானம்,—'ஸுவ:'என்பது வியானம்,—'மஹ:'என்பதுஅன்னம்,—அன்னத்தினாலேயல்லவாபிராணங்களெல்லாம்விருத்திசெய்யப்படுகின்றன.—(ஹூ:-'ஹுவ:'-'ஸுவ:'-'மஹ:'-ஆகிய)இந்நான்கு வியாஹ்ருதிகளும் நான்மடங்காகவிருக்கின்றன,—இந்நானகு வியாஹ்ருதிகளும் நான்மடங்கா யுரைக்கப்பட்டிருக்கின்றன,—இவைகளை எவன் (நன்றாய்) அறிகின்றானோ அவனே பிரம்மத்தை அறிகின்றான்,—ஸகலமான தேவர்களும் அவன்பொருட்டு பலத்தை (மோக்ஷப்பிராப்திக்காக) கொண்டுவருகின்றனர்.

ஐந்தாவதநுவாகம்முற்றிற்று.

---

## பேகன்வியாசம்.

### நன்மையையும்ஸ்வாபாவிக நன்மையையும்பற்றியது.

மனிதருடைய பொதுப்பிரயோசனத்தைக்கருதுவதே நன்மையென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இதைக்கார்க்கியர்கள் பிலாந்த்ரோபிய அல்லது பூததயை என்று சொல்லுவார்கள். ஹியுமானிடி (அல்லதுமானிடத்துவம்) இப்பொழுது வழங்கிவருகிறபடி அக்கருத்தை அவ்வளவு நன்றாயுணர்த்தவில்லை. (நன்மைபுரியும்)பழக்கத்தை நன்மைஎன்றும் (அஃதைச்செய்யஏவும்)விருப்பத்தை ஸ்வாபாவிக நன்மையென்றும் நானழைக்கின்றேன்.இஃதுகடவுளுடையதன்மையாதலால் மனதிற்குரியஎல்லாச்சத்குணங்களிலும், இதுவேமேன்மையானது; இஃதில்லையாயின் மனிதன்வீணேஉழைத்துத் தீங்குசெய்துழலுஞ் சண்டாளவஸ்துவாய் ஒருவித புழுவைவிட மேலானவனாகான். (லௌகிகவிஷயத்தில்) நன்மைஎன்பது வைதிகதர்மங்களில் அறம்என்பதை யொக்கும். இஃது பிழைக்கிடங் கொடிக்கினும் வரையின்மைக்கிடங்கொடாது (என்றால் நன்மைசெய்வதில் பிசகிப் போகக்கூடுமாயினும், வரையற்று நன்மைசெய்வது கூடாமை). அதிகமான அதிகாரத்துக்காசைபட்டு தேவர்கள் இழிந்தனர்; அதிகஞானத்தை விரும்பி நரகரும் பதிதராயினர் *. ஆயினும் அறஞ்செய்வதில் அதிகமென்பதில்லை. தேவராவது, மனிதராவது, அதனால் அபாயமடையார்கள். நன்மைசெய்யும்படி ஏவும்விருப்பம் மனிதர்ஸ்வபாவத்தில் ஆழமாய்ப் படிந்திருக்கின்றது. ஆகவே அஃது மனிதரிடம் செலுத்தப்படாவாயின், மற்றுஜீவஜந்துக்கள் விஷயத்தில் தானாகவிளங்கும். துருஷ்க்கர்கள் வெகுகுரூரசித்தர்களாயினும் மிருகங்களிடத்துப்பக்ஷமுள்ளவர்களா யிருக்கின்றனர். நாய்களுக்கும் பக்ஷிகளுக்கும் தருமஞ்செய்கின்றனர். மேலும் (இவர்கள் இராஜதானியாகிய) கான்ஸ்டாண்டிநோபிலில் ஒருகிறிஸ்துவையன் ஒரு நீண்டமூக்குடைய பக்ஷியின் வாயை விளையாட்டுக்காக அடைத்துப்போட்ட குற்றத்தின்பொருட்டு கல்லினாலடிபட்டுசாகுந் தண்டனையடைய விருந்தானென்று பஸ்பீகியஸ் (என்னும் யாத்திரைக்காரர்)சொல்லுகின்றனர்.

நன்மை அல்லது தர்மமென்னப்படும் இவ்வறத்தைச் செய்யுங்கால் வெகுவாய்ப்பிசகிப்போகலாம். இதைப்பற்றி இதாலியர்களுக்குள்ளொரு விரூபமான பழமொழியுண்டு 'நல்லான்நனிநல்லன் ஒன்றுக்கும் பயனல்லன்'மேலும் இதாலியாதேசத்துப் பண்டிதர்களில் ஒருவராகிய நிகோல ஸ்மகியேவல்என்போர் மிகவெளிப்படையாக எழுத்தாலுணர்த்தத் துணிந்ததாவது. 'கிருஸ்துமத

---

வொன்றையும் (உருப்பையும்) ஒவ்வொரு தேவதையாக வர்ணித்திருப்பது அப்பிரம்மத்தின்ரூபத்தை விளக்கியதேயன்றி வேறு தேவர்களில்லைஎன்றும்கேவலம்உபலக்ஷணையாகவே 'தேவர்'என பன்மையாக உரைக்கப்பட்டதென்பது இதின்கருத்து. இக்கருத்துக்கிசைந்தவாறே பாஷியகாரரும் உரையுரைத் திருக்கின்றனர். 'தேவா:'என்னும் பதத்திற்கு 'இந்திரியங்கள்'என்பதும் பொருளாம்.

*இஃது கிறிஸ்துசமயக்கொள்கை.

மானது குரூரமும் அநீதியுமுள்ளவர்களின் பொருட்டு, நல்லவர்களைப்பரிகொடுத்தது.' இக்கிருஸ்துமதத்தைப்போல் நன்மையை அவ்வளவு மேன்மைபடுத்தும் வேறுதருமமாவது,சமயமமாவது,அபிமதமாவது இன்மையால்தான் இவர் இவ்வாறு சொல்லும்படி நேரிட்டது. ஆகையால் அபக்கியாதியும் அபாயமும் தவிர்க்கும்பொருட்டு இவ்வளவு மேன்மைதங்கிய நடையிலுள்ள கோணல்களைக்கண்டறிவது நலமாகும். பிறருடையநன்மையைத்தேடு ; ஆயினும் அவர்களுடைய முகத்துக்காவது, (தாக்ஷண்ணியத்துக்காவது,) விருப்பத்துக்காவது, அடிமைப்படவேண்டாம். ஏனென்றால் சத்தியமுள்ள மனதைச்சிறைப்படுத்துவது எளிமை அல்லது மென்மையாகும்.மாணிக்கியத்தைப்பார்க்கிலும்) ஒருகோதுமைமணியினலதிகசந்தோஷமும் சுகமும் அடையத்தக்க ஈசாபின்சேவலுக்கு(என்றால்சேவலைப்போன்றவர்களுக்கு)மாணிக்கியத்தைக் கொடுக்கவேண்டாம். இவ்விஷயத்தில் கடவுளுடையசெயலானது தகமையைப்போதிக்கின்றது. 'அவர்சத்தியவான்கள்மீதும் அசத்தியர்மீதும் (சமமாக) தன்மழைபெய்யவும் தன்சூரியன்பிரகாசிக்கவுஞ்செய்கின்றனர்' ஆயினும்அவர்மனிதர்மீதுசம்பத்தையாவது, கனத்தையாவது, அறங்களையாவது,சமமாகப்பொழிவதில்லை. சாதாரணநன்மைகள்எல்லாருக்கும் கொடுபடவேண்டியவைதான்; விசேஷநன்மைகளோ தேர்ந்துசெய்யப்படவேண்டும். மேலும்பிரதிபிம்பத்தைச்செய்யுமிடத்து பிம்பத்தை உடைக்காமல் காக்கவேண்டும். ஏனென்றால் ஸ்வாபேக்ஷையை பிம்பமாகவும் அயலாரை நேசிப்பது பிரதிபிம்பமாகவும் கடவுள் செய்திருக்கிறார். 'உன்னுடையபொருளை எல்லாம்விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு என்னுடன்வா.' ஆயினும் நீஎன்னுடன் வந்தாலொழியஉனக்குள்ளவற்றைவிற்கவேண்டாம்; என்றால் பெருஞ்சாதனத்தாற்போலவே சிறுசாதனததாலும் அவ்வளவுநன்மைசெய்யக்கூடிய தகுந்த தொழிலொன் றிருந்தாலொழியசெய்யவேண்டாமென்பது. இவ்வாறல்லவெனில் ஆறுகளைப்போஷிப்பதில் ஊற்றைவரட்டுவதுபோலும்.

நேர்மையுள்ளஅறிவால்நடத்தப்படுகின்ற நலஞ்செய்யும்பழக்கமிருப்பதுமன்றி, இஃது சிலமனிதருடையஸ்வபாவகுணமாகவும் இருக்கின்றது. மேலும் இதைப்போலவே ஸ்வபாவமான பொல்லாங்குமுண்டு. ஏனெனில் இயற்கையாய் பிறருடையநன்மை விரும்பாதவர்களு மிருக்கின்றனர். ஸ்வல்பமானபொல்லாங்கு, சலிப்பு, எரிந்துவிழுதல், எதிர்த்தல், அடம், இவைகளைப்போன்றகுணங்களாகின்றன ; ஆழ்ந்தவையோ வெனில் பொறாமையும் முழுதீங்குமாகும். "இத்தன்மையோருக்குஏனையோர்துன்பதசையேதகுந்தபருவமாம்; இவர்களென்றுஞ்சுமையுள்ள பக்கத்திலிருப்பார்கள். (என்றால்விழுந்தோரைஆழ்த்தமுயலுவர்.)இவர்கள் லாசரஸ்என்போன் புண்களைநக்கிய நாய்களைப்போல் நலமுடையரன்று: மற்று பச்சையாயிருக்குமெதையும்மொய்த்துக்கொள்ளும்ஈக்களைப்போன்ற மனிதசத்துருகள் ; இவர்கள்மனிதரைப்பழத்தருகில்கொண்டுவருவதாகச்சொல்லி, அதன்பொருட்டு தைமன்என்பவனைப்போல் தமதுதோட்டங்களில் ஒருமரத்தையும் வைய்யாதவழக்கமுடையவர்கள் (என்றால் ஆசைக்காட்டிமோசஞ்செய்தல்).இவ்விததுர்க்குணங்கள் மானிடதன்மைக்குரிய பிழைகளாம்: அசையாது நிற்கவேண்டிய வீட்டுகளைக்கட்ட உதவாமல், அலைகளால் மோதப்படுவதற்காய கப்பல்களுக்குதவும் வளைவுமரங்களைப்போல் இத்தன்மையோர் இராஜாங்கத்துக்குத் தக்கவர்கள்.

நன்மையின்பகுதிகளும் குறிகளும் அநேகம்.ஒருவன் அந்நியரிடத்துவணக்கமும்இணக்கமுமுடையவனாயின் அவன் உலகநகர்வாசி (என்றால்உலகத்தையெல்லாம்தன்னகர்போல்பார்ப்போன்)என்றும் அவனுடையஇருதயம் மற்றநிலங்களிலும்பிரிக்கப்பட்ட தீவாகாமல் அகண்டமா யிருப்பதென்று மறியலாம்: ஏனையோருடைய துன்பத்தை நோக்கி தாபப்படுவானாகில், அவனுடைய இருதயம் தான் வெட்டுண்டு சுகந்தசாரத்தைக் கொடுக்கும் மேன்மைதங்கிய விருக்ஷத்தைப் போலும் ; எளிதில்குற்றங்களை மன்னித்துமறந்துபோவானாகில், அவன்மனது தீங்குக்குமேலாய் வீற்றிருப்பதென்றும்,அதனைச்சுடக்கூடாதென்றும் அறியலாம் ; சிறு நன்றிகளுக்கும் வந்தனம்செய்வோனாயின், அவன்மனிதருடைய அற்பவிஷயங்களைக் கருதாமல் மனிதருடைய எண்ணங்களையே சீர்தூக்குகின்றான் என வறியலாம் ; எல்லாவற்றிலும், தன்சோதரரின் மோக்ஷத்தின்பொருட்டுகர்த்தனுடைய ஆசியாயிருக்கவிரும்பிய,செண்டுபாலின் பூர்ணமுடையோனாயின், அஃது அவன் தெய்வீகத்தன்மையைவிளக்கி அவன் அக்கர்த்தனுக்கே ஒருவாறு ஒப்பாவான், என்பதைக்காட்டும்.

---

## மநு நூல்.

### உ-வது-அத்தியாயம்.

உஉ0. (பிரம்மசாரியானவன்)யதேச்சை

யாய் தூங்கும்பொழுது சூரியோதயமாகிலும்அஸ்தமானமாகிலும் ஆகில், (அவன்)அதைஅறியாதிருக்கினும், ஓர்தினம் முழுதும் உபவாஸமிருந்து (காயத்திரியை) ஜபிக்கவேண்டும்.

௨௨௧. எவனானால் சூரியோதயத்திலும் அஸ்தமனத்திலும்தூங்கிப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளாமலிருக்கின்றானோ (அவன்)மஹத்தானபாபத்துடன் சேர்க்கப்படுகின்றான்.

௨௨௨. நிதந்தோறும் இரண்டு ஸந்தியிலும் (என்றால் காலையிலும் மாலையிலும்)ஆசமனஞ்செய்து, பரிசுத்தனாகி வியாகுலமற்ற மனமுள்ளவனாகியும் பரிசுத்தமானவிடத்தில் ஜபத்தை ஜபித்து யதாவிதியாக உட்காரக்கடவான்.

௨௨௩. எந்தசூத்திரனாகிலும் ஸ்திரீயாகிலும் சிரேயஸைச் செய்தால் (பிரம்மசாரியானவன்) அவைகளனைத்தையு மொழிக்க வேண்டும்; அவன் வேதத்திற்கொத்தவரையிலும் தன்னிஷ்டப்படி அனுஷ்டிக்கக் கடவான்.

௨௨௪. சிரேயஸையே சிலர் கர்மம் அர்த்தமுமெனவும்,மற்றுஞ்சிலர் அர்த்தமும் கர்மமுமே சிரேயஸ்ஸெனவும், இன்னுஞ்சிலர் அர்த்தமேசிரேயஸ்ஸெனவும்;இம்மூன்றுமே( திரிவர்க்கஸாதனமான புருஷார்த்தம்)என்பது நிச்சயமான நியமம்.

௨௨௫. ஆசாரியன் (பரமாத்மாவாகிய) பிரம்மத்தின் விக்கிரகமாக விருக்கின்றான்; ஜனகபிதாவானவன் பிரஜாபதியின் (பிரமனின்) விக்கிரகமாகவிருக்கிறான்; தாயானவள்பூமியின்விக்கிரகமாகவிருக்கின்றாள்; மூத்தசகோதிரன்விக்கிரகமாகவுமிருக்கின்றான்.

௨௨௬. (வேதத்தை யுபதேசியா நின்ற)ஆசாரியன், ஜநகபிதா, மூத்தசஹோதிரன், இவர்களால் (சிஷ்யனான பிரம்மசாரியானவன்)மிகபீடிக்கப் பட்டபோதிலும் முக்கியமாக பிராம்மணன் (அவர்களை) அவமதிக்கத் தகாதவனாகிறான்.

௨௨௭. மானிடருக்குண்டாகும் (என்றால் கர்ப்பதாரணம் முதல்சிசு ஜனனம்வரையில் தாயும், அதின்பின்பு வேதமோதிவைத்துக்கியானமுண்டாகும்வரையில் தகப்பனும்) யாதொரு க்லேசத்தை மாதாவும் பிதாவும் ஸகிக்கின்றனரோ, அதற்கு (அந்தக் லேசத்திற்கு) தகுதியாகிய பிரத்தியுபகாரம் பண்ண நூருவருஷங்களாலும் முடியாது.

௨௨௮ ஆகையால்(எவ்வகைபிரம்மசாரி அத்தாய் தந்தைகளுக்கு ஹிதமாகியவும் ஆசாரியனுக்கு ஹிதமாகியவும் கர்மங்களைச் செய்து அவர்களைத்திருப்தி செய்விக்கின்றானோ அவனிடதபஸ்ஸுமுழுதும்முடிக்கப்படாதாகின்றது.

௨௨௯ முன்கூறிய மூன்றுபெயர்களுக்குச்செய்யப்படும் உபசாரமானது (இவனுக்குச்) சிறந்த தபஸாகின்றது; அவர்களின் நியமத்தைப் பெற்றாலன்றிவேறுதர்மத்தை (பிர்ம்மசாரியானவன்)செய்யத்தகாதவனாகின்றான்.

---

## மாதுருவாச்சல்லியம்.

### தாயினுஞ்சிறந்த தகைபடுகாப்பிலை.

அம்போல்டு என்னும் யாத்திரைக்காரர், தென்னமெரிகாவின் வடபாகத்திலுள்ளதேசங்களில் தான்சஞ்சரித்த சவிஸ்தாரங்களைச்சொல்லுமிடத்து அதிசயிக்கத்தக்க மாதுருவாச்சல்லியத்தை விளக்கும் மிகவுருக்கமுள்ள இதிஹாசமொன்றுகூறுகின்றனர். அஃதாவது.

அமெரிகாகண்டம் நூதனமாக கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்முக்கியமாய் தென்னமரிகாவெகுகாலம்இஸ்பானியர்களாலும்,போர்திகீஸர்களாலும், ஆளப்பட்டுவந்தன. இவர்களுடைய பாதிரிமார்கள் வெகுகாலமாய் ஸ்வமதபிரவசனஞ்செய்து ஆத்மகோடிகளை உஜ்ஜீவிக்கச்செய்வதுபோல் மேல்வேஷந்தரித்து, அந்நாட்டுக்குட் சென்றுநிஷ்கபடிகளாகியஅத்தேசவாசிகளைச் சிறைப்படுத்திஅடிமைகளாக்கிவந்தனர். ௧௭௯௭-வது வருஷத்தில்இவ்வித கொடுங்கொள்ளைக்காயுத்தனாகிய சான்பெர்னாண்டோ நகரத்துபாதிரிதன்சேனாசகிதனாய்குவாவியர்என்னும் நதிமுகத்வாரத்தண்டையில்போய் அங்கிருந்த வொருசிறுகுடிசைக்குட் சென்றனன். அச்சிற்றில்லைப்பெற்ற நாயகனாகிய குவாஹீபன் (என்றால், ஓர்ஜாதி)தன்பிள்ளைகளோடு ஜீவனார்த்தமாக மீன்பிடிக்கச் சென்றமையால், அவன் மனைவிமாத்திரம் மூன்று சிறுகுழந்தைகளுடன் வீட்டில் மாவரைத்துக்கொண் டிருந்தனள். உயிர்கொல்லவந்த கூற்றத்தைப்போல் நுழைந்த இவர்களைக்கண்டு அவள் தன் குழந்தைகளை எடுத்துக்கொண்டு காட்டுவழியாக ஓடமுயன்றனள். ஆயினும் அப்பாதிரியோடுசென்ற கிராதகாள் பின்தொடர்ந்து சென்று காட்டிலிருந்துமீண்டும் நதிதீரத்துக்குக் கொண்டுவந்தார்கள். அங்குபாதிரியா

னவன் ஓர்படகுடன் காத்திருந்தமையால் அப்படகில் அவளையும் அவள்பிள்ளைகளையும் ஏற்றிக்கொண்டு, கரைவழியாகச் சென்றால் அவள்மீண்டும் வழியறிந்து வந்துவிடுவாளெனநினைத்து நதிவழியாகத்தானே சான்பெர்னாண்டோநகரங் கொண்டுபோனார்கள். தான்பிடிபட்டனாளில் தகப்பனோடு நின்றுபோன பிள்ளைகளினின்றும் பிரிந்திருக்கசகியாதவளாய் இந்த தவுர்பாக்கிய ஸ்திரீயானவள், தன்னோடிருந்தசிறுகுழந்தைகளை எடுத்துக்கொண்டு சான்பெர்னாண்டோகிராமத்திலிருந்துஓடிப்போகப்பலதடவைதலைப்பட்டும்மீண்டுமீண்டும்அப்பாதிரிமார்கள் அவளைப் பிடித்துஅடித்துசொல்லொணாஹிம்சைசெய்துவந்தார்கள. கடையில் அக்கொடியபாதிரி இவளை இவளுடனிருக்கும் குழந்தைகளினின்றும்பிரித்து அடபேபோநதிதீரத்திலுள்ளரையேநீக்கிரோவென்னும் வேறொருதூரபிரதேசத்துக் கனுப்பிவிடநிச்சயித்தனன். அவ்வாறே இவள்கைகால்களைச்சுலபமாய்க் கட்டி படகிலேத்தி அடபேபோ நதிமேல் நோக்கிச்சென்றனர். தனியாக செல்லுமிவள் தன்னை இன்னஇடத்துக்குக் கொண்டுபோகிறார்களென அறியாளாயினும், சூரியப்பிரகாசத்தினால், தன்னை தன்னாட்டையும் வீட்டையும் விட்டு வெகுதுலைவுக்கு கொண்டுபோகின்றனரென அறிந்துகொண்டனள். தன்கட்டுகளை மெதுவாய் அவிழ்த்துக் கொண்டு திடீலென நதியிற்குதித்து இடதுபக்கக்கரைநோக்கி நீந்திச்சென்றனள். நீரோட்டமானது அவளை கரையிலிருந்த ஒருகற்குஹையில் கொண்டுபோய்சேர்த்தது. இக்குஹைக்கு இப்பொழுதும் இவளுடையமாதுருவாச்சல்லியத்தை யுணர்த்தும் பொருட்டு, 'தாயின்கல்' என்னும் பேர்உண்டாயிருக்கின்றது. அன்றியும் அப்பாதிரிகள் அவளைவிடவில்லை. கரைநோக்கி படகைச் செலுத்திபோய், காட்டுக்குள் ஓடிப்போன இவளைமறுபடியும் பிடித்துவந்து அக்குஹையில் படுக்கவைத்து ஒருவிதத்தோல்சவுக்கினால்அடித்து இவள்தேகமெல்லாம் புண்ணாக்கி! இவள்கைகளைபின்கட்டாய்க்கட்டி நெடுந்தூரத்திலுள்ள சவீடா மடத்துக் கிழுத்துக் கொண்டுபோனார்கள். சான்பெர்னாண்டோவுக்கும் ஜவீடாவுக்கும் எழுபத்தைந்துமயில்தூரமுண்டு. இவைகட்கு மத்தியில் பயங்கரமான அடர்ந்தகாடாக விருந்தமையால் யாதொருகரைவழியுமில்லை. ஜனங்கள் கூட்டமாய் படகுகள் சேர்த்துக்கொண்டு நதிவழியாக யாத்திரை செய்வார்கள். இப்படி யாத்திரை செய்த வொருகூட்டத்தாருடன் இவள்அனுப்பபப்பட்டாள். அப்பொழுது மழைகாலமாயிருந்தது. இவள் ஜவீடாவந்துசேர்ந்த ராத்திரி காடாந்தகாரமாயிருந்தது.. இவள் கைகால்கள் அடியால் புண்ணாகி யிருந்தமையால் அவ்விடத்திலுள்ளவர்கள் இவள் கட்டை பாதிரியாள்களுக்குத்தெரியாமல் சற்றுஅவிழ்த்துவிட்டனர். இவளைச்சுற்றியகாவல்பராமுகமாயிருக்கக்கண்டு பற்களால்கடித்துத்தன்கட்டுகளைப் பூர்த்தியாய் அவிழ்த்துக்கொண்டு அவ்விரவிற்றானே ஓடிப்போனவள்நாலாவதுநாள்உதயகாலத்தில் சான்பேர்னாண்டோகிராமத்தில் தன்சிறுகுழந்தைகளைச் சிறைபடுத்தியிருந்தகுடிசைக்குச்சமீபமாய்ப் பதுங்கித்திரிந்துகொண்டிருந்தனள். இவள் புரிந்தவீரத்தொழில்அமிதபலமுள்ள புருஷனுஞ்செய்யத்துணியமாட்டான். மழைகாலமாதலால் ஆகாயம் மேகத்தால் மூடப்பட்டிருந்தது. நாள்முழுதுக்கும் சிலநிமிஷங்களில்மாத்திரமேசூரியனைக்காணலாகும். அவ்வனமெல்லாம் அடர்ந்தமுட் செடிகளால்நிரம்பியிருந்தன. மத்தியில் அநேக ஓடைகள் பிரவாகமா யோடிக்கொண்டிருந்தன. யாதொருவழியுங் கிடையாது. அடபேபோநதிக்கரைக்கொண்டுசொல்லலாமென்றாலோ,நதிப்பிரவாகம்மேலிட்டு கரைதெரியாமல்பரவியது.அதிகுரூரனாகியபுருஷனும்இக்காட்டில் இரண்டுமூன்று மயில்தூரம் போகமாட்டான். இதுவரையில்ஒருவரும்துணிந்துசென்றதில்லை. இவ்வளவுசங்கடமும்தாயின் பாசத்துக் கோரிடையூறாக நிற்கவில்லை, அவளாவலை வெல்லமாட்டவில்லை. சான்பெர்னாண்டோவிலுள்ள தன்பிள்ளைகளை மீட்டுக்கொண்டு குவியேரிலுள்ள தன்புருஷனிடங்கொண்டுபோய் செலுத்தவேண்டியது தன்கடமை. அதற்குப் பெரும்மலைதடையானாலும் நீக்கிசெலுத்தவேண்டுமே. இவள் மூன்றுநாளுக்குள் எழுபத்தைந்துமயில் நடந்ததுபெரிதல்ல. இம்மூன்றுநாளில் எத்தனையோஓடைகள் நீந்தியிருக்கவேண்டும், எத்தனைமுட்களை தன்காலிலிருந்து பிடுங்கியிருக்கவேண்டும். நித்திரையாஹாரமில்லாமல் எவ்வளவு வருந்தியிருக்கவேண்டும். எத்தனைபுதருக்குள்சென்றுவழிதெரியாமல் அலைந்திருக்கவேண்டும். எத்தனைபுதருகளுக்குள்நுழைந்துவழிசெய்கையில் புண்ணாயிருந்ததேசமெல்லாம்முட்டைத்திருக்கவேண்டும். இவள் இம்மூன்றுநாளும் வனத்தில்யாதொன்றையும் பரித்துண்ணசக்தியில்லாமல் மரங்களின் பேரில்கும்பகும்பலாய் எறிக்கொண்டிருந்த கட்டெறும்புகளைப் புசித்து உயிரோடு தன்பிள்ளைகளிருந்தவிடம் வந்துசேர்ந்தனளாம். இதன்மேலாவதுஅக்கொடியகிராதகனாகியபாதிரிமனதிரங்கித்தாயையும்பிள்ளைகளையும் வி

ட்டுவிடலாகாதா! மீண்டும் இரங்காதகல்லி லும் வலியநெஞ்சமுடையஅப்பாதகன் இவ ளைக் குழந்தைகளினின்றும்பிரித்து, வெகு தூரத்திலுள்ளமேலோருனூகோநதிக்கரைக் கனுப்பிவிட்டான். இவ்விடத்திலவள் தன்று யரத்தைச்சஹியாமல், ஆஹாரத்தைப்புசியா மல் பிராணனைவிட்டனள்.

## பிரமதருமம்.

### உ - ம் அத்தியாயம்.

கூ. இஜ்ஜகம் ஆதியில் கொஞ்சமுமி ல்லை. இதுண்டாகுமுன் பிரயதரிஸனன் (ஆகியபரமாத்மா) ஒருவனே சத்ஸ்வரூப னாய்விற்றிருந்தான். அப்பிரம்மம் அத்வி தீயம். அவன்மஹான், பிறப்பு, மூப்பு, மரணம், அற்றவன்; அமிரதத்துவமும் அபயமும் அளிப்பவன்.

க0. அப்பரமாத்மா ஜகத்தைச் சிரு ஷ்டிக்கஆலோசித்தான். அப்படியாலோ சித்து இந்தஜகத்தையும் மற்றுமுள்ளயா வையும் படைத்தான்.

கக. இப்புருஷனிடத்திலிருந்து பி ராணன் உண்டாகிறது. மனதும் சமஸ்த இந்திரியங்களும், ஆகாயமும், காற்றும், தீயும், நீரும், சமஸ்தத்துக்கும் ஆதாரமா ன பிருதிவியும் உண்டாகின்றன.

கஉ. இப் பரமாத்மாவினிடத்திலுள் ளபயத்தினுல்அக்னிதகிக்கின்றது. இவன் பயத்தினுல் சூரியன்பிரகாசிக்கிறுன். இந் திரன், வாயு, அய்ந்தாவதான மிருத்யு. இவர்கள் இவன் பயத்தினுல் சஞ்சரிக்கி ன்றனர்.

## அமிர்தவசனி.

இந்த பூமியைச் சூழ்ந்து சொண்டிருக் கிற மஹா சமுத்திரத்தின் மத்தியில் அநே கந் தீவுகள் உண்டென்று அறிவீர்கள். அ வைகளுக்குச் சமீபமாய் பவளம், முத்து மு தலியவை குவிக்கப் பட்டிருக்குறதென்றும் வாசித்திருப்பீர்கள். சிலதீவுகளில் வச்சிர வைடூரியங்கள் உண்டாயிருக்கின்றன வென் றும் பொன் வெள்ளிக்கனிகள் உண்டென்று ம் கேட்டிருப்பீர்கள். இத்தன்மையானஒருதீ வுக்கு உங்களைக் கொண்டுபோய் வீட்டு, உங் களுக்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஒருதினத்திற்குள்ளாகச் சேர்த்துக்கொள்ளு ங்கள், உதயத்தில் இந்த இடத்தை விட்டு போய்விடவேண்டும் என்று தயாள முள்ள வனுகிய ஒருவன் உங்களுக்குச்சொல்வானு ஞல் என்ன செய்வீர்கள்? ஸ்வஸ்தமாய் படு த்து நித்திரை செய்வீர்களோ? அல்லது ஒரு வரோடோருவர்வீண்வார்த்தைகளாடி பொ ழுதைப் போக்குவீர்களோ? இந்த அமிர்த வசனியையவாசிக்கிற ஸ்திரீகளில் ஒருவரோனு ம் இப்படிச் செய்யார்களென்று நம்புகிறே ம். அவரவர்கள் பரபரப்பாய் இங்குமங்கும் ஓடி தங்களால் இயன்றவளவில் பொருளை ச் சேர்த்துக் கட்டிக்கொள்வார்களே யொ ழியவீணில்காலத்தைப்போக்கார்கள். வச்சி ர வைடூரியங்கள் முத்து பவளங்கள் முதலிய வற்றிலும் விலையுயர்ந்தபொருள்களை நாம் ஒ வ்வொருவரும் சேகரித்துக்கொள்ளலாம். இ வ்வுலகத்தில் ஏகசக்ராதிபதியாயிருக்கிறவ னும் அவனுக்குண்டாமிருக்கிற வச்சிர வை டூரியங்களையும் பொன் வெள்ளிகளையும் விட் டு விட்டு மரிக்கவேண்டிவரும். இம்மையிலு ம் மறுமையிலும் ஸாஸ்வதமாய் நாம் அனு பவிக்கத்தக்க விலையுயர்ந்த பொருள்கள் அ நேகம் உண்டு. அவை என்ன வென்று நினை க்கிறீர்கள்? பிறருக்கு நம்மால் பயன் உண் டாகும்படி நடத்தலே அப்பொருளாம். பிற ருக்கு நம்மால் அநேக விதத்தில் பயனுண் டாகலாம்:—

க. நம்முடைய நல்ல நடக்கையினுல் பி றர் பயன் அடையலாம். நலமானவற்றைச் செய்யுங்கள் என்று பிறருக்குச் சொல்லி, நாம் தீயவற்றைச் செய்வோமானுல் பயனு ண்டாகாது. தேவானுக்கிரகத்தை நாடி நல மானவற்றையேசெய்யப் பிரயத்தனப் பட் டு நடப்போமானுல் நமக்கும் பிறருக்கும் பயன் உண்டாகும். தீதானவற்றைச் செய்கி றவர்கள் நம்முடைய நன்நடத்தையைப்பா ர்த்துச்சீரடையலாமே.

உ. நம்முடைய நல்லசம்பாஷணையினு லும் பிறருக்குப்பயனுண்டாகலாம். சமயம் பார்த்துநல்லஆலோசனைசொல்வோமானுல் பயன்உண்டாகும். நம்முடையதோழியர்க ள் தகாத வார்த்தைகளைப் பேசுகிறதை யா வது, தகாதகாரியங்களைச் செய்கிறதையா வது, பார்போமானுல் மெதுவாய்ச் சமயம் பார்த்து இனி அப்படிச் செய்யவேண்டா மென்று சொல்ல வேண்டும். ஒழிந்த போ து இருவர்மூவர்ஒன்ருய்ச்சேர்ந்து, வீண்வா ர்த்தைகளாடி, பொழுதுபோக்குவதை விட் டு, நம்முடைய குடும்பத்தின் அபிவிர்த்திக் குத்தக்க ஆலோசனைகளைச்செய்து, பிள்ளைக ளைப்படிப்பித்து நம்முடைய பரமபிதாவாகி

ய தேவனைப் பற்றியும், அவருடைய திருச்செயல்களைப் பற்றியும், சம்பாஷிப்போமானால் மிகுந்த பிரயோசன முண்டாகுமே!

ங. பிறருக்குப் பயனுண்டாக முயற்சிசெய்யலாம். அந்தகரை நடத்தியும், நோயினால் வருந்துகிறவர்களைப் போய்ப்பார்த்தும், எளியவர்களுக்கும், அனாதைகளா யிருக்கிற கைம்பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் சகாயஞ் செய்யலாம்.

ச. நம்முடைய ஜபத் தியானத்தினாலும் பிறருக்குப்பயனுண்டாகலாம். லக்ஷாதிலக்ஷம் ஜனங்களை நாம்பார்க்கிறதில்லை: பார்க்கவும் கூடாது. ஆகிலும் அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தேவனைநோக்கிப் பிரார்த்திக்கலாம். நம்முடைய பந்துஜனங்களையும், சிநேகிதர்களையும், தேசத்தாரையும், இவ்வுலகத்திலுள்ள மற்றெல்லாரையும் காத்து இரக்ஷித்தருளவேண்டும் என்று தேவனை நோக்கி அனுதினம் பிரார்த்திப்போமானால், நாமும் பிறரும் சிறந்தபாக்கியங்களை யனுபவிக்கலாமே!

ஆகையால் எங்கள்சகோதிரிசள்ஒவ்வொருவரும் தங்களால் பிறருக்குப்பயனுண்டாகும்படி இடைவிடாமல் பிரயத்தனப்படுவார்களென்று கோருகிறோம். பிறர் நம்மைப் புகழவாவது, நம்முடைய அற்பப் பிரயத்தனங்களினால் மோக்ஷ இராச்சியத்தை அடையலாமென்றாவது எண்ணிமுயற்ச்சி செய்வது புத்தி ஈனமாகும். நம்முடைய பரமபிதாவாகியதேவனுடையஇரக்கமும் தயையும் இப்பூமியிலுள்ள உயிர்களுக்கு விளங்கி, அவரது திவ்விய திருநாமங்களுக்குப் புகழ்ச்சியும்ஸ்துதிகளும் உண்டாகும்படி நாம் நடந்தால், இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவான்களாயிருக்கலாம்.

## நிருபம்.

### ஸர்வாத்மதாராய; ஶ்ரீமதேநாராயணாயநமஃ

யாத்ருவஸீபாவனாயஸ்ய - ஸித்திர்பவதிதாத்ருஸீ. தத்துவபோதினிபத்ரிகாதிபருக்கு.

ஐயா.

தாங்கள் பத்திரிகையையெழுதத்தொடங்குங்கால் தங்களையெந்தமதத்துக்கும் அபிமானிகளல்லவென்றேநினைத்தேன். விவஹாரத்தில் நீங்களும் இதரமதோத்தாரிகளைப்போலவே ஸ்வாபிமானிகளேதவிர அந்நிய தாதோற்றவில்லை. ஏனென்றால்,மனோத்தியானத்துக்கு, ஓமென்றபதத்தைப்போல பிரகிருதிக்குஅதின்வழிபோகாமல்அடைக்கி மனதை அநுசரிக்கும்படி ஓர் நிலையைத் தருகிறதும், ருகவு, யஜுர்வேதங்களுக்கு, அபரரூபங்களாக விருப்பதும் விக்கிரகங்களென்று நீங்கள் விசாரிக்காமல், அர்ச்சையை, விட்டுவிட்டபோதிலும் கடவுளுக்கு பிரம்மமென்றபதத்திற்குஒப்பான, விஷ்ணு, வாசுதேவ, ஈஶ்வர,நாராயண, சப்தங்கள், பிரமத்தினுடைய, சிரேஷ்டமான கலியாணகுணங்களைத்தெரிவிக்கும் பதங்களாக விருக்க, தாங்கள் கண்டாகர்ணனைப்போல அந்தசப்தங்களை யெவ்வளவும், உச்சரிக்காம லிருக்கிறதைப் பார்க்க ஆச்சரியம் உண்டாகின்றது. ஆதலால் மேற்சொல்லிய யோக்கியமானபதங்களை தாங்கள் திருவாய்மலர்ந்துபிரயோகஞ்செய்யாமலிருப்பதற்கு, ஏதுவின்னதென்று அரியவிரும்புகின்றேன், இதைஅறிந்தபின்பு அர்ச்சையைக்குரித்து சந்தேகநிவர்த்திக்காக சிலகேள்விகளைக்கேள்க்க யெத்தனித்திருக்கின்றேன்.

திருஅல்லிக்கேணி. | தங்கள்விதேயன், ஓர்
ஜூலை-மீ௨௨-உ. | திருஅல்லிக்கேணிவாசி.

## நிருபம்.

### சிங்கப்பூரான்கருத்து.

எத்தலம்புகழும் கர்த்தருக்கினிய
தத்துவபோதினி பத்திராதிபரே!

பெங்களூர் முத்தமிழ்க்கவிபானுசிங்கமாகிய, ம-௱-௱-ஶ்ரீ. ஆ. ஐயாசாமி முதலியாரவர்களினரியமுயற்சியால் தாங்களனுப்பிய இரண்டாமாண்டு "தத்துவபோதினிகளைப் பார்வையிட அதனாலடைந்த சிலாக்கியத்தைப்புல்லறிவால் வரையமுயன்றால் மிக்கப்பெருகுமென்றஞ்சி பொருசொல்லிலடக்கி இப்பூமண்டலத்தைக்கவர்ந்திருக்கும் கொடியவஞ்ஞானவிருளைச் சங்கரித்து மெய்ஞ்ஞான வெளியைப்பறப்புதற்குத் தகுதியானபத்திரிகை வேறொன்றில்லையென்று சிரமீதுகொண்டதன்றி, இப்பத்திரிகையின் கருத்தை தெளிவுறக்கண்டோ ரிகழாது கொள்வார்களென்று நம்புகிறேன். ஆகையால் சந்தாதார்களும் நமது வேதசமாஜசபையின்கருத்துக்கிண

ங்கிய விவேகிகளும் சந்தாதார்களைச்சேர்த்துக் கூடினவரையில் கருத்துகளும் வரை வார்களாகில்சர்வவல்லநாயகருக்குகந்ததாஸராகுவோமென்பதற்குச்சந்தேகமில்லை.

ஓ! அருமைதங்கயகி பத்திராதிபரே? விதேயன்கருத்தைச் சுருக்கி யொரு கீர்த்தனமா யிதனடியிற்குறித்திருப்பதையுங் காண்க. அஃதாவது.

சந்தவிருத்தம்.

தேறல்செறியலர்தங்கு மாவயில்விடுத்தே தெவ்வர்
திறனீக்கிமன் மனுகூப்படி யியனன்பதிசிறந்த
வீறல்செறியுரமாடுமையார் மன்னவெழிலி
வீழ்ந்துருஞ்சி காளையுள்ளங் கவர்நங்கையின்குழல்போல
சூறல்செறிவிண்ணிற் புனற்சொரிதுபல தோற்றம்
துலங்கவதிகுணவாரியைத் தொகுத்தவுருவென்றும்
பாறல் செறியாதுநின்ற பற்றற்றமெய்ப்பொருளின்
பாதம்பணிந்தேத்தாவுயிரிருந்தும்பலனென்னே.

## கீர்த்தனம்.

## இராகம் - ஆநந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

இருந்தும்பல னென்ன? ஐயையோ!
இறந்தும்பல னென்ன?

அநுபல்லவி.

இருந்தும்பலனென்ன! இருந்தும்பலனென்ன!
பரந்திருவடிதன்னைச் சிரமொத்துப்பணியாமல்......(இருந்.)

சரணங்கள்.

க. பாதகமைந்தும்புரிந்து - பொல்லாப்
படுகுழிக்காளாய்ச்சிறந்து,
ஓதுகலையுண்மைகடந்து - ஐயையோ!
ஓரறிவுபோலேகிடந்து,
தீதுறுங்கல்லுங்கட்டையால், செய்தபலசுருபங்களைக்
காதலாய்ப்பணிந்துழுவர், கர்த்தன்கழலைமறந்து...(இரு.)

உ. சதிகள்மிகவுஞ்செய்து - அரிய
தாஸர்போற்றன்னைப்பாவித்து,
கதிகூறுவோரைப்பகைத்து - ஐயையோ!
காலனுக்குயிர்வளர்த்து,
மதிகெட்டுமண்விண்டன்னில், மௌலநிகரொன்றில்லா
அதிவல்லநாயன்கழல் அகத்தில்பணியாதென்றும்...(இரு.)

ஈ. மாதைக்கோவிலாட்டிவைத்து - அவளின்
மதுரமொழியையாசித்து,
காதையஞ்ஞானம்படித்து - அதினில்
கண்டதைமெய்யன்றபித்து,

பேதையுற்றமாந்தர்களைப் பின்னும்பவத்திலாட்டி
கோதையுற்றபரமனைக் கும்பிடாமல்செல்வமுடன். (இரு).

கஅசுசு - ம்ஷு }
மே-மீ உஅ-வ }
சிங்கப்பூர் }

இங்ஙனம்,
மேலோர்க்கினியன்
வே. நாராயணசாமி நாயகன்.

## நிருபம்.

ஓம்பரப்ரம்ஹணேநமஃ.

அக்ஷயவருடத்தின் அகவிலையைக்குறித்தது.

நேரிசைவெண்பா.

அக்ஷயவாண்டின் அகவிலையேறியதால்
நிக்ஷயசீவர்நிலைதளர்ந்தே - பக்ஷமுடன்
ஓ பரப்பிரம்மமே யுன்பதம்போற்றுகிறோம்
நீர்பொழிச்செய்யும் நிலத்து

ஆசிரியவிருத்தம்.

எங்கும்நிறைந்தருளும் ஓங்காரபிரும்மமே
ஈறும்அக்ஷயவாண்டிலே,
எழிலிமழைபொழியாத குறைவினலோகத்தில்
எளியர்முதலோர்களொந்து,
அங்குமிங்குமோடி யலையினும்ரூபாய்க்கு
ஆறுபடிஅரிசிதானும்,
ஆனகேழ்வரகு பத்துபடிதானுமே
அகப்படுதலருமையாகி,
பொங்கும்மனந்தளர்ந் துன்புகழைதோத்திரம்
புரிகின்றோம்நாங்கள்முன்னம்,
புன்மையார்புத்தியால் செய்துறும்பாபத்தை
பொறுப்பதுன்பாரமையா,
கங்குல்பகலின்றியே மழைபொழிந்தேரிகுளங்
கரைபிறண்டுலகமெங்குங்
கனமானதான்னியம்விளைந்தோங்கச்செய்தருள்
கருணாகரக்கடவுளே.

இஃது பெங்களூர் ஆ - ஐயாசாமிமுதலியாரியற்றியது.

## நிருபம்.

### மன்றுட்டக்கீர்த்தனை.

சந்தவிருத்தம்.

அருவாய்க்கருவாய் அண்டரொடுபிண்டர்கள்
அறியாப்பொருளாய்த் தொண்டுதுணையற்றதாய் - விரிவான
உருவாய்த்திருவாய் ஓங்குமெந்தபடியிலும்
உளவாய்நலவாய் ஒப்புவமையிலாததாய் - முதலாகி

குருவாய்மறையாய்க் குற்றமற்றநீதமாய்
குணமாறுளவாய்க் கூறுதற்கேயரிதுற்ற - பொருளான
பரமேமயமே பாவியின்மேற்சித்தம்வைத்துப்
பச்குமபதத்தாற் பாரதனிலாளுமின்றே - அருளோனே.

## இராகம் - கமாசு - ஆதிதாளம்.

பல்லவி.

ஓ ! சர்வவல்லதயாபரமே - உம
துயர்கழனம்பினேன்.

அநுபல்லவி.

அருவுருநாசா ! வறுகுணவாசா ! ரீ-ரீ-ரீ-ரீ-
கருவுருநேசா ! கார்ப்பதுன்பாரம்............... ...(ஓ ! சர்.)

சரணங்கள்.

க. இருக்குயஜுர்திருசாமஹறதர்வணவேதா ! போதா !
இகலறுவிதியிதிகாசபுராணமூதா !
செருக்கிலாமலேசெரிபலவுயிர்களை - ரீ-ரீ-ரீ-ரீ-
சிரமுடனாளுகின்றபரமமேபாருங்காரும்...(ஓ ! சர்.)

உ. தந்தைதாய்பிணிகளந்தமலியுமெம்நாதா ! நீதா !
தஞ்சம்வஞ்சமில்லாதஜகதாதா !
முந்தவேதஸமாஜத்தானவோளா - ரீ-ரீ-ரீ-ரீ-
முன்னிலுநன்னெறியுன்னவேயருள்புரி... (ஓ ! சர்.)

௩. சுத்ததத்துவசித்தியபூரணதேவா ! மூவா !
தோலுமாகமபேதமிலாதமாகாவா !
சத்தியதத்துவபோதினியுரைபடி - ரீ-ரீ-ரீ-ரீ
சார்ந்துபடியுள்ளோர்வாழ்ந்திடவருள்புரி...(ஓ ! சர்.)

இஃது.
சிங்கப்பூர்-சித்திரகவிவல்ல
வெ - நாராயணசாமிநாயகரியற்றியது.

---

அமிர்தவசனியின்,

## விளம்பரம்.

அமிர்தவசனி என்னும் பெயருடைய சிறுபத்திரிகை யொன்றைப்பிரதிமாதம் இரண்டாவது சனிவாரந்தோறும் நாங்கள் பிரசுரஞ்செய்ய உத்தேசித்திருக்கின்றோம்.

இச்சென்னையம்பதியிலுள்ள பற்பல பாலிகா பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களும், தற்காலத்தில் கல்விகற்பவர்களுமாகிய எம்போலிய ஹிந்துஸ்திரீகளுக்கு நல்லறிவி, நல்லொழுக்கங்களை விர்த்திசெய்விப்பதே இப்பத்திரிகையின் கருத்தாம்.

சமயதருமம், ஆசாரதருமம், இலக்கிய இலக்கணங்கள், ககோள பூகோளங்கள், கணிதம், ஜெந்து சுபாவம்சுபாவம், பாகசாஸ்திரம் பலவகைப்பட்ட தையல்கள், விடுகதைகள், விநோதகதைகள், பழமொழிகள், முதலிய பலபிரயோஜனமான விஷயங்களை எங்களாலியன்றவரையில் இப்பத்திகையின் கண்ணே இயற்றுவிக்க முயலுவோம். எங்கள் அபிப்பிராயங்களை விளக்கத்த விலாசம் போட்டு, சென்னைபூக்கடை வீதியிலுள்ள ப்ரீசர்ச்சுமிஷின் பாலி

காபாடசாலைக்காவது, சென்னை ஆசாரப்பன்வீதியிலிள்ள ப்ரீசர்ச்சுமிஷின் பாலிகாபாடசாலைக்காவது அனுப்பலாம்.

கஅசுஎ-ஹு டிசம்பர்மீ உ0வ. } பத்திராதிபர்கள்.

## சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒருஅட்டவணைப்பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்தசந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

## இரக்ஷணார்த்தம்.

ஆசிரியவிருத்தம்.

பரிசுத்தனகிபாராதிப்படைத்திடும் பரலோகவெமதப்பனே,
பாரிலெமைசூழ்ந்திடும் பாமரம்மோகாதி பலதீமையால்பயந்து,
அரிதாயநினதருட்பாதமேகதியென் றடைக்கலம்புகுமடியருக்,
கய்யநினதபயகரமல்லாதுபுக்கிடம் ஆனவேறுதவியுண்டோ,
பரிதாபமின்றியேபாவமும்பழிகளும் பாழ்நெஞ்சமறியச்செயும்,
பரவியேமெம்மனேபிரமரத்தைசற்றேனும் பாரில்சுகிக்கச்செய,
பரிவுடன்காக்குநினதருடளம்பலவாய்ப் பரந்தொளிர்ப்பதுமமன்றி,
பண்பாயசாதனம்பார்க்கவேறில்லையே பரிபூரணானந்தமே.

## தைரியத்தின்பொருட்டு.

நிர்ப்புதமெனப்படரு மோகபாசங்களால் நிலைபற்றுவாடுகின்றோம்,
நின்பாதகமலமே சதியென்றுநாடினோம் நிஷ்களங்கப்பிரமனே,
சர்வவல்லமையுள்ள கர்த்தனேமுக்தனே சகலசாம்ராஜ்ஜியமுளனே,
சர்வேசநினதாவி யாலெமைசிறப்பித்து சகலபற்றுகளுமறவே,
அர்ப்புதமதாய்வளரு மளவற்றகொடுமைகளை ஐயமில்லாதுவெல்ல,
ஆனமனவூக்கமும் ஆண்மையுந்தந்தருள் அன்புகூர்ந்தெமதப்பனே,
தர்மமறியாதபல கர்மிகள்சேவையும் தகைபற்றநீசசேர்க்கை,
தனைமீதிலெமைவென்று தாழ்த்தாமலெங்களும் தைரியம்அருள்புரிகுவாய்.

---

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்.—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால், பதிப்பிக்கப்பட்டது.